பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை வழங்குவதில் பெற்றோர்களின் பங்களிப்பு

DR. மார்க்கண்டு திருக்குமார் MBBS, MD(O&G),

மகப்பேற்றியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் நிபுணரும்

தலைவர் - மருத்துவ சிகிச்சைத்துறை

மருத்துவபீடம்

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்

ஒரு பிள்ளையின் ஆளுமையின் விருத்தியில் முக்கிய பகுதியில் குடும்ப அலகு என்ற நிறுவனமே அடிப்படை பொறுப்புக்களை சுமந்து நிற்கின்றது. இங்கு பெற்றோர்கள் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றனர்.

மாணவர்களின் கல்வியின் ஆர்வம், அறிவாற்றல், சமூக மற்றும் நடத்தை பண்புக்கூறுகள் பெற்றோர்களின் செயல்பாடுகளினால் செல்வாக்கு செலுத்துகிறது என்பதனை தற்போதைய விஞ்ஞான ரீதியான சான்றுகள் நிரூபிக்கின்றன.

பெற்றோர்களின் ஈடுபாடானது மாணவர்களின் கல்வியில் ஈட்டும் சாதனைக்கு அப்பால் அம்மாணவர்களின் பல்வேறுபட்ட வளர்ச்சிகளுடன் தொடர்புடையதாகும்.
இவையாவன:

1. கல்வியானது ஓர் முக்கியத்துவமானது என்பதில் வலுவான நம்பிக்கை ஏற்படுத்தல்.
2. கிரமமான பள்ளி வருகை.
3. கற்றலுக்கான தனிப்பட்ட திறன் மற்றும் சுய செயல்திறன் ஆகியவற்றின் அதிக ஈடுபாடு.
4. பாடசாலை வேலைகளில் அதிக ஈடுபாடு.
5. மேம்பட்ட நடத்தைகள்.
6. சிறந்த சமூக திறன்கள்.
7. அதிகரித்த சமூக மூலதனம்.

ஆரம்ப கல்வியில் இருந்து உயர்நிலைப் பள்ளி வரை குழந்தைகள் முன்னேறும் போது பெற்றோரின் ஈடுபாடானது சமூக வளர்ச்சிக்கும் கல்விசார் சாதனைக்கும் பங்களிக்கும் என்பதனையும் சான்றுகள் காட்டுகின்றன.

ஒரு குழந்தையின் கல்வி வீட்டில் இருந்தே தொடங்குகிறது. எனவே பெற்றோர்களே அவர்களின் முதல் ஆசிரியர்களாவர். மேலும் அவர்களின் தன்மையை வடிவமைப்பதிலும் பெற்றோர்களுக்கு முக்கிய பங்கு உண்டு அத்துடன் வீடு மற்றும் பள்ளியில் கல்வி சமநிலை ஒரு மாணவரின் உண்மையான கற்றலை வடிவமைக்கின்றது.

ஒரு குழந்தையின் கற்றல் அளவுகோலானது அவர்கள் வீட்டில் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பதோடு மிகவும் தொடர்புடையதாகும்.

பாடசாலைக் கல்விக்கு அப்பால் பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர்களின் அதீத ஈடுபாடானது அவர்களின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகின்றது. இது அவர்களின் சமூக திறன்களையும் சிறந்த பழக்கவழக்கங்களையும்

மேம்படுத்தும். வீட்டில் சிறந்த ஆதரவு பெற்ற பிள்ளைகள் கல்வியில் உயரிய சாதனைகளை பெற்றது மட்டுமன்றி உயர்வான நல் மரியாதையுடனும் வளர்ந்திடுகின்றார்கள். மேற்கூறிய விடயமானது பல்வேறுபட்ட ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்ட உண்மையுமாகும். எனவே பெற்றோர்களாகிய நாம் பிள்ளைகளின் கல்வியில் பாரிய பங்கை வகிப்பதனூடாக கல்வியில் அவர்களது அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கு முக்கிய பங்களிப்பினை வகிக்க முடியும் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

குழந்தையின் கல்விக்கு உதவ பெற்றோர்கள் பின்பற்றக் கூடிய சில வழிகள்.

ஒரு முன்மாதிரியான பெற்றோர்களாக இருங்கள்:

பெற்றோர்களின் செயற்பாடுகளினால் குழந்தைகள் எளிதில் ஈர்க்கப்படுவார்கள். எனவே அவர்களின் கல்வி கற்கும் காலத்தில் பெற்றோர்கள் ஒரு முன்மாதிரியாக இருப்பது நல்லது. பெற்றோர்களே ஒரு குழந்தையின் முதல் ஆசிரியரும் ஆவார். எனவே முதலில் விடயங்களை வீட்டில் பிள்ளைகளுடன் சேர்ந்து ஒன்றாக கற்றுக் கொடுங்கள். அவர்களுக்கு சிறந்த ஆரம்பக் கல்வியை வீட்டிலேயே கற்றுக் கொடுக்கப்பட்டால் பள்ளி வாழ்க்கை உற்சாகமாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்கும். நட்புரீதியான நினைவூட்டல்கள் மற்றும் வழிகாட்டல்களுடன் பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் புதிய விடயங்களை கற்றுக் கொள்ளவதற்கு அவர்களை ஊக்குவிக்கவும் வேண்டும்.

இனிமையானதும் அமைதியானதுமான வீட்டு சூழ்நிலையை ஏற்படுத்துதல் :

குழந்தைகளுக்கு வீட்டில் அமைதியான மற்றும் இனிமையான சூழ்நிலையை வழங்குவதை பெற்றோர்கள் உறுதி செய்ய வேண்டும். குழந்தையின் முன்னிலையில் குடும்பப் பிரச்சினைகளைப் பற்றி விவாதிப்பதை தவிர்ப்பது நல்லது. மேலும் தேவையற்ற சண்டைகளுடன் வீட்டில் குழப்பத்தை உருவாக்க வேண்டாம். தந்தை மற்றும் தாய் இருவரும் பிள்ளையின் கல்வியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு அவர்களுக்கு போதுமான உணர்வு ரீதியான ஆதரவை வழங்க வேண்டும்.

பிள்ளைகளை முறையான ஒழுங்குபடுத்தல் அவர்களின் வெற்றிக்கு இன்றியமையாததாக அமையும். பிள்ளைகள் படிக்கும் இடமானது கவனக் கலைப்பான் அற்ற இடமாக இருத்தல் வேண்டும். தொலைபேசி, தொலைக்காட்சி, போன்றவற்றின் சத்தங்கள் இல்லாத இடமாகவும் ஆட்கள் கதைக்கும் சத்தம் அணுகாத இடமாகவும் அவர்கள் கற்பதற்கு உரிய இடமாக வீட்டிலே தேர்ந்தெடுத்து கொடுக்க வேண்டும். அம்மேசையானது சுவரை நோக்கியதாக இருத்தல் வேண்டும். ஜன்னலுக்கு நேரெதிரே மேசை, கதிரை வைப்பதால் கவனச்சிறதல் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே அதனை தவிர்ப்பது நன்று.

பிள்ளைகள் கற்கும் மேசை மேல் எந்தவிதமான புத்தகங்களோ கொப்பிகளோ வைக்க வேண்டாம். அவர்கள் கற்கும் தருணத்தில் பாவிக்க வேண்டிய புத்தகம், கொப்பி

மட்டும் வைத்திருக்கவும் படித்து முடித்தவுடன் அவற்றை உரிய இடத்தில் வைக்கவும் பழக்கவும்.

வெளிச்சமானது (மின்குமிழானது) படிக்கும் மேசைக்கு மேலே இருக்க தக்கதாக அமைத்துக் கொள்ளல் வேண்டும். இதன்மூலம் ஒளியானது படிக்கும் புத்தகம் மேல் மட்டும் விழுமாறு பார்த்துக்கொள்ளல் வேண்டும். அதாவது ஒளியானது நேரே கண்ணிற்கு செல்வதை தவிர்த்தல் வேண்டும்.

பிள்ளைகள் வீட்டில் எவ்வாறு படிக்க வேண்டும்.

தினமும் பாடசாலையில் அன்றன்று கற்பிக்கும் பாடங்களை அன்றே கற்று முடிக்குமாறு பணிக்க வேண்டும். வாசிக்கும் பொழுது மௌனமாக வாசிக்க வேண்டும். உரத்து வாசிக்கும் பழக்கத்தைத் தவிர்த்தல் நல்லது.

பாடசாலை கல்வி முக்கியத்துவம் என்பதை பிள்ளைகளுக்கு பெறரோர் செயலால் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

ஒவ்வொரு நாளும் பிள்ளைகள் மிகுந்த ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் பாடசாலை செல்ல வேண்டும். அதற்காக பெற்றோர் பிள்ளைகளிடம் பாடசாலை தொடர்பாக உயர்வான எண்ணத்தை வளர்க்க வேண்டும். பிள்ளைகள் முன்னிலையில் பாடசாலையையோ அல்லது ஆசிரியரையோ தாழ்த்தி ஒரு போதும் பேசக் கூடாது. அதாவது பாடசாலை பற்றியோ ஆசிரியர் பற்றியோ குறைவான எண்ணக்கருவை வளர்ப்போமானால் பிள்ளைக்கு பாடசாலை பற்றிய உயர்வான எண்ணம் அற்றுப்போகும். பாடசாலை பற்றிய உயர்வான எண்ணம் இருந்தால் மாத்திரமே பிள்ளை தவறாமல் ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு செல்லும். கல்வியின் முதலாவது விடயம் கிரமமான பள்ளி வருகையேயாகும். பாடசாலைக்கு ஒரு பிள்ளை ஒரு நாள் செல்லாவிட்டாலும் கூட அதில் பெரியதொரு இடைவெளி அந்த பிள்ளைக்கு ஏற்படும். அந்த இடைவெளியை நிரப்ப முடியாது. ஒவ்வொரு நாளும் பிள்ளைகள் பாடசாலைக்கு செல்வதென்பது அவர்களின் சுய ஆர்வத்தினாலாகும். அதனை தீர்மானிப்பது பெற்றோர் பிள்ளைக்கு கொடுக்கும் ஆர்வமே. ஆகவே ஆர்வத்தை குறைக்கக் கூடிய மாதிரியான எந்தவிதமான கதைகளையும் பேச்சுக்களையும் பிள்ளைகளுடனோ அல்லது அவர்கள் செவிகளிற்கு எட்டும் வகையிளோ கதைக்க கூடாது.

குவிந்த கவனமானது அறிவுத் தேடலின் ஓர் அத்திவாரமென்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். பிள்ளைகள் எவ்வாறு எதிர்காலத்தில் வரவேண்டுமென்ற இலக்கொன்றை மனதில் ஆழப்படுத்துவதன் ஊடாக கல்வியின் மேலும் இயல்பாகவே ஓர் உள்ளார்ந்த ஆர்வமும் ஓர்மமும் ஏற்படும்.

ஆர்வமானது குவிந்த கவனத்திற்கும், குவிந்த கவனமானது அறிவுத் தேடலுக்கும் வழிவகுக்கும். எனவே பிள்ளைகளை ஓர் இயல்பூக்கம் உடைய மாணவர்களாக உருமாற்றுவதன் ஊடாக கற்றல், கற்பித்தலில் உச்சக்கட்ட வினைத்திறனை அடைய முடியுமென்பதை திடமாக நம்புங்கள்.

காலையில் எழுந்து காலை உணவினை தயார் பண்ணி பிள்ளைக்கு கொடுத்து அனுப்ப வேண்டியது பெற்றோரது கடமை ஆகும். காலை உணவினை உண்ணாத மாணவர்களின் கிரகித்தல் ஆற்றலானது குறைவடையும். பொருளாதார கஷ்டத்தில் இருக்கும் வீட்டில் இருவேளை உணவு தான் சாப்பிட முடியுமேயானால் இரவு வேளைக்கான உணவை தியாகம் செய்யலாம். ஆனால் காலை மதிய உணவானது மிகவும் அவசியமானது. வெறும் வயிற்றில் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பக்கூடாது. பிள்ளை பாடசாலையிலிருந்து வீடு வந்தவுடன் இன்முகத்துடன் பிள்ளையை வரவேற்று பாடசாலையில் அன்று நடந்த விடயங்களை அன்பாக பிள்ளையிடம் கேட்க வேண்டும். தினமும் இவ்வாறு செய்துவரின் பிள்ளைகள் அடுத்த நாள் படிக்கும் போது அம்மாவுக்கு இந்த பாடத்தை சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் மிகவும் கிரகித்து செவிமடுக்கும். அதாவது பெற்றோர்கள் பிள்ளைகளுடன் வார்த்தையால் கதைக்காமல் மூளையால் கதைக்க வேண்டும்.

பிள்ளைகளுடன் சேர்ந்து வாசிக்க வேண்டும்.

பெற்றோர்களுடன் சேர்ந்து சில விடயங்களை செய்யும் போது பிள்ளைகளுக்கு ஒரு ஆதரவையும் நம்பிக்கையையும் கொடுக்கின்றது. எனவே பாடங்களை ஒன்றாக வீட்டில் வாசிப்பதானது குழந்தை தன் கற்றலுடன் நெருக்கமாக இருப்பதற்கு வழிவகுக்கும். மேலும் வாசிப்பு பழக்கமானது அவர்களின் சொற் களஞ்சியத்தை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் மேலும் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தையும் ஏற்படுத்துகின்றது. நூலகத்தை பயன்படுத்த தூண்டுவதும் வீட்டில் தரமான புத்தகங்களை பகிர்ந்து கொள்வதும் நல்லதாகும். ஒரு மாணவனுக்கு மொழி விருத்தி என்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். ஒரு மாணவன் தனது மூன்றாம் வகுப்பில் தனது தாய் மொழியினை சிரமமின்றி சுயமாக வாசித்து விளங்கிக் கொள்ளக் கூடியவராக இருத்தல் வேண்டும். எனவே வாசிக்கும் ஆற்றலை வீட்டில் இருந்து வளர்த்துக் கொள்வது மிக இன்றியமையாததாகும்.

மூன்றாம் வகுப்பு படிக்கும் பிள்ளை தனது தாய் மொழியை எழுத்துக் கூட்டாமல் வாசிக்க வேண்டும். அவ்வாறு வாசிக்க தெரியாவிட்டால் அந்த பிள்ளையின் கற்றல் பெறுபேறு குறைவுறும். ஏனென்றால் ஆசிரியர் சொல்லும் போது பிள்ளைக்கு சுயமாக விளங்க வேண்டும். ஆசிரியர் சொல்வதை பிள்ளை எழுத வேண்டும். அவ்வாறு இருக்க வேண்டுமானால் தமது தாய்மொழியில் பிள்ளை பரீட்ச்சயமாக இருத்தல் வேண்டும். ஆகவே அதில் நாங்கள் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும். மிகவும் இலகுவான வழி என்னவென்றால் ஒரு புதினப்பத்திரிகையை வாரத்திற்கு ஒருமுறை வாங்கி, பிள்ளையிடம் வாசிக்க கொடுக்கலாம். அப்படி கொடுத்தால் பிள்ளை வாசித்து கிரமமாக எழுதப் பழகும். அத்துடன் தனது தாய் மொழியில் மிகப் பரீட்ச்சயமாயும் வரும். பிள்ளையை பாடசாலைக்கு அனுப்பும் முன்னரே நன்றாக எழுத வாசிக்க கற்றுக் கொடுப்போமானால், அந்த பிள்ளை வகுப்பில் ஆசிரியர் கூறுவதை கற்றுக் கொள்ளும் ஆற்றல் அதிகரிக்கும்.

அடுத்ததாக, ஏழாம் வகுப்பு படிக்கும் பிள்ளையின் கணித பாடத்தின் பெறுபேறும் அதன் தாய் மொழியின் பெறுபேறும் குறைவாக இருந்தால், அந்த பிள்ளையின் கல்வியில் இடைவிலகல் தன்மை அதிகமாகும். காரணம் என்னவெனில் பிள்ளையின் பெறுபேறு குறைந்தால் பிள்ளைக்கு தாழ்வு மனப்பாங்கு ஏற்படும். மற்றவர்களுடன் ஒப்பிடும் போது மேலும் தாழ்வு மனப்பான்மை அதிகரிக்கும். இதனால் சாதாரணமாகவே இடைவிலகல் தன்மை ஏற்படும். ஆகவே பிள்ளைக்கு தாய் மொழி மற்றும் கணிதப் பாடத்தை திறன்பட கற்றுக் கொடுக்க வேண்டும். கணித பாடம் எனப்படுவது சாதாரணமாக வீட்டில் கிடைக்கக் கூடிய எண்ணக்கூடிய பொருட்களைக் கொண்டு கற்றுக் கொடுக்க முடியும் (உதாரணமாக: கல், ஆடு, மாடு). பெற்றோர்கள் பிள்ளைக்கு வீட்டில் உள்ளதை உபயோகித்து கணிதம் கற்பித்து கொடுக்கலாம்.

குழந்தைகளின் செயற்பாடுகளை மேற்பார்வையிடுங்கள் :

பாடசாலை மற்றும் வீட்டில் குழந்தைகளின் செயற்பாடுகள் குறித்து ஒரு கண் வைத்திருப்பது முக்கியமாகும். அவர்களின் பொதுவான நடத்தைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் அவர்கள் படிப்பின் மீது எவ்வாறு செயற்படுகிறார்கள் என்பதோடு நெருக்கமாக தொடர்புபட்டுள்ளது. எனவே குறித்த குழந்தை பருவத்திலிருந்தே எந்தவொரு அசாதாரண நடத்தையையும் சரி செய்வதற்காக உரிய நேரத்தில் அறிவுரைகளை வழங்கி நற்பிரஜையாக இருக்க ஊக்குவிக்கவும்.

அவர்களின் கற்றலை கண்காணிக்கவும்:

சில குழந்தைகள் வீட்டிலேயே சுய கற்றலுக்காக நேரத்தை செலவிடுவதற்கான முன் முயற்சிகளை மேற்கொள்வார்கள். இருப்பினும் சில பிள்ளைகள் அவ்வாறு மேற்கொள்ளமாட்டார்கள். சுய கற்றல் மேற்கொள்ளாத பிள்ளைகளின் செயற்பாட்டில் பெற்றோர்களின் தலையீடு அவசியம். எனினும் அதனை கண்ணியமான முறையில், வற்புறுத்தலின்றி மேற்கொள்ள வேண்டும். மேலும் வீட்டில் அவர்களது கற்றல் குறித்து சரியான கண்காணிப்பு செய்ய, நட்பு ரீதியான ஆலோசனைகளை வழங்கவும். கல்வியில் அவர்களது செயற்றிறன் குன்றியிருப்பின், உங்கள் பிள்ளைகள் தங்கள் ஓய்வு நேரத்தை செலவழிக்கும் வழிமுறைகளை மேற்பார்வை செய்யவும். ஒரு மாணவன் தனது ஓய்வு நேரத்தை செலவழிக்கும் முறையானது அவனது மனப்பாங்கை வடிவமைப்பதில் முக்கிய பங்கை ஆற்றுகின்றது. எனவே ஓய்வு நேரத்தின் போது சமூக பிறழ்வான நடத்தைகளுடன் தொடர்புபடும் பொழுது, கல்வியின் மீது பிள்ளைகளின் இயல்பூக்கம் குறைவடையும். எனவே கல்வியில் அவர்களின் செயற்றிறன் குறைவாக இருப்பின், அவர்கள் தமது ஓய்வு நேரத்தை கழிக்கும் வழிமுறைகளை கண்ணோட்டமிட்டு, நட்புரீதியில் ஆலோசனைகளையும் வழங்க வேண்டும்.

குழந்தையின் கற்றலுக்கு முன்னுரிமை கொடுங்கள்:

கற்றல் என்பது ஒரு குழந்தையின் வாழ்வில் ஓர் முக்கியமான கட்டமாகும். எனவே பெற்றோர்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். எனவே அவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் பாதிப்பினையேற்படுத்தும் தேவையற்ற பயணங்கள் அல்லது செயற்பாடுகளை தவிர்க்கவிட வேண்டும். முக்கியத்துவமற்ற விடயங்களுக்காக பாடசாலையில் தேவையற்ற விடுமுறைகளை எடுக்க அவர்களை ஊக்குவிக்காதீர்கள். அத்துடன் தினசரி பாடசாலை வருகையின் முக்கியத்துவத்தை அவர்களுக்கு புரியவும் வைக்க வேண்டும்.

குழந்தைகளுக்கான நேரத்தை ஒதுக்குங்கள்:

வேலை செய்யும் பெற்றோர்கள் தங்கள் இறுக்கமான கால அட்டவணையில் இருப்பார்கள் என்பது ஓர் உண்மை இருப்பினும் உங்கள் குழந்தைகளுக்காக சிறிது நேரம் ஒதுக்குங்கள். அவர்களை வீட்டில் தனியாக விடாதீர்கள். பெற்றோருக்கும் குழந்தைகளுக்குமிடையில் ஓர் நல்லுறவை பேணுவதன் மூலம் அவர்களுக்கு வீட்டில் ஒரு வசதியான இடத்தை உருவாக்குங்கள்; ஒன்றாக சாப்பிடுங்கள்; ஓய்வு நேரத்தில் அவர்களுடன் விளையாடுங்கள்; அவ்வப்போது பயணங்களுக்கு கூட்டிச் சென்று அவர்களின் மன அழுத்தத்திலிருந்து விடுவித்து கொள்ள வழி அமைத்துக் கொடுங்கள்.

வீட்டு முகாமைத்துவம்.

பிள்ளைகள் நாங்கள் செய்பவற்றை செய்யும். நாங்கள் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டு பிள்ளையை படிக்குமாறு கூறினால் ஒரு போதும் படிக்காது. பிள்ளை செயலை பின்பற்றுமே தவிர எங்கள் சொல்லை பின்பற்றாது. ஆகவே எங்கள் சொல்லை விட செயலில் அவதானமாக இருக்க வேண்டும். ஆகவே வேலைத்தளங்களுடன் முடித்து விட்டு ஆறுமணிக்கு வீட்டிற்கு வரவேண்டும். வீட்டிற்கு வந்த பிறகு பிள்ளைகளுடன் நேரத்தை செலவழித்து, இரவு என்பது கற்றலுக்கான நேரம் என்பதை நாங்கள் பிள்ளைகளிற்கு உணர்த்த வேண்டும்.

சினேகிதம் என்பது மிக அவசியமான ஒன்றாகும். மிக நெருக்கமான சினேகிதம் என்பது சமவயதினருடையதாக இருக்க வேண்டும். சமவயதினரல்லாத, அதிக வயதினருடனான பழக்கத்தினால் ஆரம்பத்திலேயே பாலியல் தொடர்பான கதைகளினால் பிள்ளைகளின் கவனம் சிதறடிக்கப்படலாம்; சமூக பிறழ்வான நடவடிக்கைகளிலும் ஈர்க்கப்படலாம். அதே போன்று சினேகிதருடன் சேரவிடாமல் வளர்ப்பதும் ஆபத்தானதே. சினேகிதம் தேவை ஆனால் சமவயதுடைய நல்ல நண்பர்களுடனாக இருக்க வேண்டும். பெற்றோர்கள் அதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

வருமானம் குறைந்த குடும்பத்தில் உள்ளோர் தங்கள் குடும்பத்தில் உள்ள பிள்ளைகளை விடுமுறை நாட்களில் வேலைக்கு அனுப்பலாம். ஆனால் பெறப்படும்

சம்பளத்தை பெற்றோர்கள் வாங்கியெடுத்தல் வேண்டும். காரணம் பிள்ளைக்கு உழைக்க வழி தெரியுமே தவிர, அதனை சரியான முறையில் செலவிடுவதற்குரிய மனமுதிர்ச்சியோ அல்லது அறிவுத் திறனோ குறைவு. ஆகவே பெற்றோராகிய நீங்கள் அவர்களுடைய அந்த பணத்தை பெற்று அவர்களுக்கு தேவையானதை வாங்கி கொடுக்கலாம். பிள்ளையிடம் செலவழிக்க கொடுத்தால் அதனை பிள்ளை தவறான வழியில் செலவழிக்கும். எனவே பெற்றோர்கள் பண முகாமைத்துவத்தில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். ஆனால் பொருளாதார மேம்பாட்டுக்காக ஒரு போதும் பாடசாலைக் கல்வியை இடை நிறுத்திவிடக் கூடாது.

பெற்றோர்-ஆசிரியர் உறவுகளைப் பேணுங்கள்: பெற்றோர் ஆசிரியர் சங்க கூட்டங்கள் போன்றவற்றை தவிர்க்க வேண்டாம். உங்கள் குழந்தையின் ஆசிரியர்களுடன் நல்ல உறவை வைத்திருப்பதானது நல்ல விடயமாகும். பாடசாலையில் உங்கள் குழந்தையின் செயற்பாடுகள் பற்றி அவர்களிடமிருந்து அறிந்து கொள்ளுங்கள். ஏதேனும் தவறு நடந்தால் குழந்தையை திருத்துவதை உறுதி செய்ய வேண்டும். மேலும் பெற்றோர் ஆசிரியர் உறவுகளைப் பேணுவது உங்கள் குழந்தையின் விடயங்களில் உங்களின் ஆர்வத்தை காட்டுகிறது. இது ஆசிரியர்களுக்கு நல்ல உணர்வை கொடுக்கும்.

பாடசாலையில் நடைபெறும் பெற்றார் ஆசிரியர் சங்க கூட்டங்களுக்கு தவறாமல் செல்வதுடன், எமது பிள்ளைகளை எவ்வாறு வழி நடத்த வேண்டும் என்பது தொடர்பாக கலந்தாலோசிக்கவும் வேண்டும். அவ்வாறு கதைப்பதானால் ஆசிரியர்களுக்கும் பெற்றோர் தங்களுடைய பிள்ளையின் கல்வியில் அக்கறையாக இருக்கிறார் என ஆசிரியர்களுக்கும் ஆர்வம் ஏற்படும். இதன் மூலம் இயல்பாகவே ஆசிரியர்கள் தங்களுடைய கடமைகளில் சிறப்பாக செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படும். ஆகவே பெற்றோர் ஆசிரியர் சங்க கூட்டங்களுக்கு தவறாமல் செல்லுதல் வேண்டும்.

பிள்ளைகளின் ஆரோக்கியம்

சில பிள்ளைகளுக்கு கண் பார்வையிலோ அல்லது உடம்பில் ஏதாவது சுகயீனம் இருக்குமேயானால் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். தேக ஆரோக்கியம் குன்றிய பிள்ளையின் கல்வி உயர் நிலையை அடையாது உதாரணமாக கண்பார்வை குறைதல், தலைவலி, பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் வயிற்றுவலி, கடுமையான இரத்தப்போக்கு இதுபோன்ற நேரங்களில் பாடசாலையில் விடுமுறை எடுக்க நேரிடும். அவ்வாறான பிரச்சினைகளுக்கு வைத்தியசாலைக்கு சென்று தீர்வினை பெற்றுக் கொடுக்க வேண்டும். இணையற்ற கல்வியை வழங்குவதற்கு ஆரோக்கியம் பாதிப்பாக அமையக் கூடாது. முக்கியமாக பெண்களின் கல்வி.

பிள்ளைகளின் செயற்பாடு

பிள்ளைகள் நல்ல விடயங்களையும் கற்றுக் கொள்வார்கள்; தீய விடயங்களையும் கற்றுக் கொள்வார்கள். கெட்ட விடயங்களை நாம் கண்டு கொண்டால் அதனை நிறுத்த வேண்டும். உதாரணமாக பன்னிரெண்டு, பதின்மூன்று வயதுப் பிள்ளை இன்னுமொரு ஆணுடன் காதல் என்ற விடயம் உங்கள் காதிற்கு வந்தால் அந்த பிள்ளையை அடித்து துன்புறுத்தி தற்கொலை முயற்சிக்கு தூண்டக் கூடாது. பதினெட்டு வயதிற்குட்பட்ட காதல் ஒரு சரீரக் கவர்ச்சி. காதல் எனப்படுவது சரியான வயதில் சரியான நபருடன் ஏற்படுவது. அதனை அந்த பிள்ளைக்கு சரியாக புரிய வைக்க வேண்டும். ஆகவே பிள்ளையின் செயற்பாட்டை கவனிப்பதோடு பிள்ளைக்கு சரியான தீர்வினையும் பெற்றுக் கொடுக்க வேண்டும். பிள்ளைகளின் நடத்தையில் அசாதாரண நிலையினை கண்டு கொண்டால் அதனை சரி செய்வதற்கு சரியான முறையினை கையாள வேண்டும்.

மேலதிக திட்டமிடல்: பிள்ளைகள் தங்கள் நாளில் பாதியை பாடசாலையில் செலவிடுகிறார்கள். எனவே வீட்டில் அவர்களுக்கு மேலதிக கற்றல் மற்றும் வீட்டுப் பாட நேரத்தை அவர்களுக்கு சுமையின்றி திட்டமிட அவர்களுக்கு உதவுங்கள். வீட்டிலேயே முழு நேரமும் கற்றல் நடவடிக்கைகளை திட்டமிடுவது நல்ல யோசனையல்ல. சிறந்த ஒரு மாணவர் பருவத்தை அடைவதற்கு பாடங்கள், விளையாட்டு மற்றும் ஓய்வு ஆகியவற்றுக்கு இடையில் சிறந்த ஒரு நேர சமநிலையை பேணுவது அவசியமாகும். வீட்டில் கிடைக்கும் ஓய்வு நேரம் அனைத்தையும் கல்விக்காக செலவளிப்பது அவசியமில்லை.

பிள்ளையின் சுய கற்றலுக்கான நேரம் இரவு நேரமாகும். சாதாரணமாக ஒவ்வொரு நாளும் இரவில் மூன்று மணித்தியாலங்கள் கற்பது போதுமானதாகும். கற்றல் என்பது நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாக ஒவ்வொரு நாளும் சீராக படித்து வந்தால் கல்வியில் வெற்றி பெறலாம். ஆகவே ஒவ்வொரு நாளும் மூன்று மணித்தியாலங்கள் சுய கற்றலில் ஈடுபடுதல் போதுமானது. அதற்காக பெற்றோர் பௌதிக ரீதியான சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அதாவது கவனக்கலைப்பற்ற இடத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் பிள்ளைகளின் கல்விக்கு ஒவ்வொருநாளும் குறிப்பிட்ட பணத்தை சேமிப்பதன் மூலம் பிள்ளைக்கு படிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் அவசியமாகும்.

ஆக்கபூர்வமான விமர்சனங்களை கொடுங்கள் : உங்கள் குழந்தை கல்வியில் சிறப்பாக செயல்படவில்லை அல்லது படிப்புக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதை நீங்கள் கவனித்தால் ஆரம்பத்திலேயே அவற்றை சரி செய்யவும். பிள்ளைகளின் மன அமைதியை தவறான வார்த்தைகளால் கெடுப்பது நல்லதல்ல. கொஞ்சம் பொறுமையுடன் கையாளுங்கள். ஏதேனும் குறைபாடுகளை நீங்கள் கண்டால் ஆக்கபூர்வமான விமர்சனங்களை மட்டும் கொடுங்கள். வெறுமனே குற்றம் சாட்டுவதனை விட எது சரி, எது தவறு என்பதை அவர்களுக்கு புரியவைக்கவும். தகாத சொற்பிரயோகங்களை உபயோகிக்க கூடாது. ஒருநாளும்

பிள்ளைகளை தீயவார்த்தைகளால் காயப்படுத்தக் கூடாது. பிள்ளையின் பெறுபேறு குறையுமானால் பிள்ளையுடன் அன்பாக பேசி உற்சாகமளிப்பதுடன் ஆசிரியரிடம் சென்று பிள்ளையின் கல்வி முன்னேற்றுவதற்கான ஆக்கபூர்வமான விமர்சனங்களை வழங்க வேண்டும்.

கற்றுக் கொள்ள வேடிக்கையான வழிகளை உருவாக்குங்கள் : சில சுவாரஸ்யமான வழிகளை வகுப்பதன் மூலம் கற்றலை ஒரு வேடிக்கையான செயலாக மாற்றவும். உதாரணமாக ஓர் பாடத்தின் முழு அலகினை இலகுவாகவும் விரைவாகவும் மீட்டல் செய்வதற்கு உதவும் வகையில் இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் ஒரு பக்கத்தில் குறியீடுகள் மூலம் சிறு குறிப்பெடுத்தல். அத்துடன் ஓர் அலகினை ஓய்வு நேரங்களில் மீட்டிப் பார்ப்பதற்காக தடித்த கடதாசி போன்ற மட்டையில் (Flash cards) சிறு குறிப்புக்களாக எழுதி ஓய்வு நேரங்களில் மனப்பாடம் செய்து கொள்வதற்காக தம்மிடமே வைத்துக் கொள்ளல்.

வீட்டுப் பணிகளுக்கு உதவுங்கள்

குழந்தைகளுக்கு அவர்களின் படிப்பில் நல்ல ஆதரவை வழங்குவது உண்மையில் கற்றலுக்கான உள் உணர்வையும் ஆர்வத்தையும் அதிகரிக்கும். வீட்டுப்பயிற்சிகள் அல்லது பாடதிட்டங்களை பூர்த்தி செய்ய சிறிய உதவிகளை செய்யுங்கள். இருப்பினும் முழுமையாக இவர்களுக்கான வீட்டு பாடத்தையும் முழுமையாக செய்ய வேண்டாம். வீட்டுப் பாடங்களை பிள்ளையுடன் சேர்ந்து அவர்களை செய்வதற்கு ஊக்குவிக்க வேண்டும். பிள்ளையின் சுயமான சிந்தனையை மழுங்கடிக்ககூடாது.

அவர்களின் பரீட்சைக்கு அவர்களை தயார்படுத்துங்கள்

பரீட்சைக் காலங்களில் அவர்களுடைய பாடங்களுடன் அவர்களை தனியாக விட்டுவிடாதீர்கள். நல்ல ஆதரவுடன் பரீட்சைக்கு தயாராக அவர்களை தயார்ப்படுத்துங்கள். அவர்களின் பரீட்சை சம்மந்தமான கவலைகள் மற்றும் பதட்டங்களை குறைக்க உண்மையான பரீட்சைக்கு முன் நீங்கள் வீட்டில் மாதிரிப் பரீட்சைகளை நடத்தலாம். மேலும் அவர்கள் பலவீனமாக இருக்கும் பாடப்பகுதிகளுக்கு கூடுதல் உதவிகளையும் முடிந்தவரை நீங்கள் வழங்கலாம்.

முடிவுகளுக்கு அவர்களுக்கு வெகுமதி

ஒரு குழந்தை கல்வியில் சிறப்பாக செயல்பட கல்வி தொடர்பான சிறந்த ஆர்வத்தை ஏற்படுத்துதல் முக்கியமானதாகும். எனவே பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்றால் அவர்களுக்கு சிறு வெகுமதிகளையளிக்க தயங்க வேண்டாம். இது எதிர்வரும் காலங்களில் சிறப்பாக செயற்பட அவர்களுக்கு உந்துதல் அளிக்கிறது. இருப்பினும் ஒரு வரம்பை வைத்திருங்கள் சராசரி செயற்திறனுக்கான மிக உயர்ந்த

பரிசில்களை அவர்களுக்கு வழங்குவது நல்லதல்ல. இது அவர்களின் உள்ளுணர்வை மழுங்கச் செய்கிறது.

உங்களின் தனிப்பட்ட அனுபவத்தை பகிர்ந்து கொள்ளுங்கள்

உங்கள் பள்ளி வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்களை உங்கள் குழந்தைகளுடன் ஓய்வு நேரத்தில் பகிர்ந்து கொள்வது நல்லது. இது கற்றலின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ள அவர்களுக்கு உதவும். பாடசாலைக் காலத்தில் மேற்கொண்ட கடின உழைப்பானது பிற்காலத்தில் எவ்வாறு பயனளித்தது என்பதை உங்கள் வெற்றிக் கதைகளுடன் தெரியப்படுத்துங்கள். பெற்றோர்கள் தாம் தவறவிட்ட சந்தர்ப்பங்களை பிள்ளைகளிடம் கூறி, அம்மாதிரியான தவறினை பிள்ளைகள் செய்யாமல் தவிர்க்க ஆலோசனை கூறலாம்.

ஒரு நல்ல நண்பராக இருங்கள்

உங்கள் குழந்தையின் நல்ல நண்பராக இருப்பது முக்கியமாகும். இதன்மூலம் அவர்களின் மனதிலெழும் எதையும் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும். அவர்களின் உண்மையான உணர்வுகளை வெளிப்படுத்தவும் அவர்களுக்கு ஒரு இடம் கொடுங்கள். என்ன நடந்தாலும் நீங்கள் ஒரு உதவியை கொடுப்பீர்கள் என்று அவர்களுக்கு உறுதியளிக்கவும். இது அவர்களின் தன்னம்பிக்கையின் அளவை உயர்த்துவதோடு கற்றல் மற்றும் பிற பாடசாலை நடவடிக்கைகளில் சிறந்து விளங்கவும் சிறப்பாக செயற்படவும் உதவும்.

பெற்றோர்களது முக்கிய சவாலானது பிள்ளைகளை முதலாம் தரத்திலிருந்து உயர்தரம் வரை கொண்டு செல்வதாகும். அதன்பின்னர் அவர்கள் சுயமாகவே படித்து முன்னேறுவதற்கான ஆர்வம் ஏற்படும். பொருளாதாரத்தில் இருந்து உயர் நிலையை அடைவதற்கான சிறந்த வழி கல்வியேயாகும். இவ்வாறாக பிள்ளைகளை உயர்ந்த இடத்திற்கு கொண்டு வருவது பெற்றோர்களுடைய தலையாய கடமையாகும்.

உங்கள் குழந்தைகளுடன் பேசுங்கள்

உங்களுக்கு இறுக்கமான வேலைப்பழு இருப்பினும் உங்கள் குழந்தைகளுடன் தினமும் போதுமான நேரத்தை செலவிடுங்கள். பாடசாலையிலும் வெளியேயும் ஏதேனும் விடயங்கள் குறித்த அவர்களின் கரிசனங்கள் அல்லது சந்தேகங்களை அவர்களிடம் இருந்து அறிந்து கொள்ளுங்கள். எந்தவொரு எண்ணங்கள் அல்லது

அச்சுறுத்தும் விடயங்கள் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை என்பதை உறுதி செய்து அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு அவர்களே தீர்வினை காண்பதற்கான பூரண ஆதரவினை கொடுங்கள்.

சுய கற்றலை ஊக்குவிக்கவும் : சுய கற்றலானது ஏனையவர்கள் கற்றுக் கொடுக்கும் கல்வியை விட சிறந்தது. பெற்றோர்கள் சுயகற்றலை ஊக்குவிக்கும் பட்சத்தில் அதன் நன்மைகள் பிள்ளைகளின் பாடசாலை வகுப்பறைகளின் அடைவு மட்டத்தில் பிரதிபலிக்கும். எனவே வீட்டில் சுய கற்றலுக்கு அவர்களை ஊக்குவிப்பது பெற்றோரின் பண்பாகும். சம வயதுடைய ஏனைய குழந்தைகளுடன் ஒரு நல்ல நண்பர்கள் வட்டத்தை உருவாக்கி சுவாரஸ்யமான செயற்பாடுகளை ஒழுங்கமைக்கவும் அவர்களுக்கு நீங்கள் உதவலாம். இது அவர்களை மகிழ்ச்சிக்கு உட்படுத்துவது மட்டுமல்லாமல் வேறுபட்ட அனுபவங்களை கற்றுக் கொள்ளவும் உதவும்.

நேர முகாமைத்துவம்

வாழ்கையில் வெற்றி பெற்றவர்கள் தங்கள் நேரமுகாமைத்துவத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். எனவே மாணவர்கள் தங்களுக்கு கிடைக்கும் 24 மணித்தியாலத்ததை சரியான முறையில் பயன்படுத்துவதன் ஊடாக தங்களை வெற்றிப்பாதைக்கு இட்டுச்செல்லமுடியும் என்பதனை பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

மாணவர்கள் சுயமாக கற்கும் நேரத்தை தினமும் ஒரே நேரத்தில் மேற்கொள்ள செய்ய வேண்டும். மேலும் தினமும் 6 மணித்தியாலத்திற்கு குறையாமலும் 7 மணித்தியாலத்திற்கு கூடாமலும் அவர்கள் நித்திரை கொள்ள வைக்க வேண்டும். ஒவ்வொரு மாணவரும் தங்களுக்கு உகந்த நேரத்தில் உறங்க வேண்டும். எனினும் இரவு 10 தொடக்கம் அதிகாலை 4 மணிவரை நேரத்தை நித்திரை நேரமாக வைத்துக் கொள்வது சாலச்சிறந்ததாகும்.

பிள்ளைகள் ஓய்வு எடுக்க உதவுங்கள்:

கற்றல் மற்றும் விளையாட்டு நேரத்திற்கு கூடுதலாக நாள் முடிவில் அவர்களுக்கு சரியான ஓய்வு கிடைக்கிறது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். சரியான போசனை கொண்ட உணவுடன் ஓய்வெடுக்க அவர்களுக்கு உதவுங்கள். உங்கள் குழந்தையின் ஆர்வமுள்ள விடயங்களை அறிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். அவற்றை விடுமுறை நாட்களில் செய்வதன் ஊடாக மன அழுத்தத்திலிருந்து அவர்களுக்கு நல்ல நிவாரணம் கிடைக்கும்.

கல்விச் சுற்றுலாக்களுக்கு செல்ல ஊக்குவியுங்கள்:

விடுமுறை நாட்களில் கல்விச் சுற்றுலாக்களை மேற்கொள்வது நல்லது. இது பாடங்களை பற்றி நன்கு புரிந்து கொள்ள அவர்களுக்கு உதவும். எனவே அவர்கள் இதற்கான விடயங்களுடன் தொடர்புபட்ட இடங்களை தெரிவு செய்து சுற்றுலா செல்லலாம். மேலும் அருங்காட்சியகங்கள், மற்றும் உயிரியல் பூங்காக்களுக்கு அவ்வப்போது பயணிப்பதானது இயற்கையோடு அவர்களுக்கு தொடர்பினை ஏற்படுத்தவும் புதிய பல விடயங்களை கற்றுக் கொள்வதற்கும் வழிவகுக்கும்.

பாதுகாப்பான இணைய (Internet) மற்றும் திறன்பேசி (Smartphone) பயன்படுத்தல்.

தற்காலத்தில் இணையதினதும் திறன்பேசிகளினதும் பயன்பாடு அதிகமாகிவிட்டது. இவை மாணவர்களின் கைகளில் இலகுவாகவும் கிடைத்தும்விடுகிறது. பெற்றோர்கள் தம் பிள்ளைகள் இவற்றை பயன்படுத்த அனுமதிக்கும் போது மிகுந்த அவதானிப்புடனும் கண்காணிப்புடன் இருக்க வேண்டும்.

- திறன்பேசிகளை அத்தியாவசியமான தேவைகளின் போதுமாத்திரம் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும். அளவுக்கதிக நேரம் பயன்படுத்த அனுமதிக்க வேண்டாம்.
- சிறுவர்களுக்கென அங்கீகரிக்கப்பட்ட இணையதளங்கள் (websites) மற்றும் செயலிகளை (Apps) மட்டும் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும். மட்டுபடுத்தப்பட்ட நேரம் மாத்திரம் பயன்படுத்த அனுமதிக்கவும். வயது முதிர்ச்சிக்கு பொருத்தமற்ற அல்லது தவறான வலைத்தளங்களுள் பிரவேசிப்பதை தடைசெய்ய வேண்டும்.
- இணையத்தையும் திறன்பேசிகளையும் கண்காணிப்பற்ற முறையிலும் அதீதமாகவும் பயன்படுத்த அனுமதிக்கும் பொழுது மீள்வதற்கு சிக்கலான பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்திவிடும்.
  உதாரணமாக
  - தவறான இணையத்தள பாவணைக்கு அடிமையாதல்.
  - அதிக நேரம் இணையத்தையும் திறன்பேசிகளையும் பயன்படுத்தல்.
  - தூக்கமின்மை
  - கல்வி மற்றும் கல்வி சாராத செயல்பாடுகளில் நாட்டமின்மை.
  - தீய நண்பர்கள் வட்டத்துள் சிக்குதல். சமூக பிறழ்வான நடவடிக்கைகளில் ஈடுபடல்.

மேற்கூறிய விடயங்களை பின்வருமாறு ஒரே பார்வையில் கூறலாம்.

ஒரு பிள்ளைக்கு கல்வி ஊட்டப்பட்டு வளர்க்கப்படும் முதல் நிறுவனம் குடும்பம் ஆகும். எனவே அப் பிள்ளை பிற்காலத்தில் ஈட்டும் கல்விச்சாதனைக்கு குடும்ப அலகு ஒரு அடிப்படை பங்கு வகிக்கின்றது. இங்கு பெற்றோர்கள் பின்வரும் வழிகளில் தமது பங்களிப்பினை வழங்க முடியும்.

1. வீட்டு சூழ்நிலையை கற்றலுக்கு உகந்தவாறு வடிவமைத்து கொடுத்தல்.
2. பிள்ளைகளின் கல்வி அடைவு மட்டத்தினை வகுப்பாசிரியரூடாக தொடர்பை ஏற்படுத்தி சீர்செய்தல்.
3. வீட்டில் பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து வெற்றிக்கு ஒத்தாசை வழங்குதல்.
4. பாடசாலையில் மேற்கொள்ளும் கற்றல் தொடர்பான முடிவுகளில் பங்கு வகித்தல்.
5. சிறுவர்களுக்கென அங்கீகரிக்கப்பட்ட இணையதளங்கள் (websites) மற்றும் செயலிகளை (Apps) மட்டும் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும். மட்டுபடுத்தப்பட்ட நேரம் மாத்திரம் பயன்படுத்த அனுமதிக்கவும்.